உ

சிவமயம்



யாழ் இருபாலையைப் பிறப்பிடமாகவும்,

இங்கிலாந்தை வதிவிடமாகவும் கொண்டு வாழ்ந்த

# திருமதி செல்லையா தங்கம்மா

அவர்களின் மறைவையொட்டி வெளியிடப்பட்ட

# நினைவமுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருமதி செல்லையா தங்கம்மா அவர்கள்



தோற்றம்
26.05.1920

மறைவு
06.12.2007

## திதி வெண்பா

சர்வசித் தாண்டு நிறைதிங்கள் கார்த்திகையில்
சேர்அபரபக்கத் திரயோதசி திதியதனில் - பார்புகழும்
செல்லையா பத்தினியார் தங்கம்மா அம்மையார்
தொல்லுலகு நீத்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

பால்நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உவப்பிலா ஆனந்தமாய
தேனினைச்சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம் பற்றியே மாதிருப் புகழ் பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின் முத்தியே சேர்வதாற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா ஒப்பிலாமாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா வெற்றிவேலாயுதப் பெருமாளே

## திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல்லிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளத்தினில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயு தத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தல மொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதும் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியட்டு நிலையும் தெரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தனை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தில் உள்ளே சிவலிங்கம் காட்டிச்
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி,
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி செல்லையா தங்கம்மா அவர்களின் வரலாறு

தமிழ் ஈழத்தின் எழிலான முத்தாக விளங்கும் யாழ்ப்பாணத் திருநாட்டின் சைவ வேளான் குலத்தோர் குடியில் சேனாதிராஜா முதலியார் முதலான சான்றோர் வாழ்ந்த இருபாலை எனும் பதியில் வாழ்ந்த அரியகுட்டி மாரிமுத்து தம்பதிகளுக்கு செல்ல மகளாகவும் சதாசிவம், முத்தையா போன்றவர்களுக்கு அன்புச் சகோதரியாகவும் 26.05.1920ம் ஆண்டில் பிறந்தார்.

இவரது பிறப்பின் பலனாக செல்வச் செழிப்புடன் இவரது குடும்பம் விழங்கியது. தனது ஆரம்பக் கல்வியை சாதனா பாடசாலையிலும் பின்னர் கோப்பாய் மத்திய மகாவித்தியால யத்திலும் தனது கல்வியைக் கற்றார். மணப்பருவம் எய்தியவுடன் அவரின் சகோதரர் மணம் முடித்த தங்கம்மா என்பவரின் சகோதரனான திரு சின்னத்தம்பி செல்லையா என்பவரை மணம் முடித்து இல்வாழ்க்கையை இனிதே நடாத்தி வந்தார். அவ்வாழ்வின் பயனாக மூன்று ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளை யையும் புதல்வர்களாகப் பெற்று இல்வாழ்க்கையில் பயன் விருந்தோம்பல் என்பதற்கிணங்க தான தருமங்கள் பசி என்று வந்தவர்களுக்கு உணவழித்தும் மற்றவர்களது கஸ்டத்தை தனது கஸ்டம் போல கருதி பொருளுதவிகள் செய்து வந்தார். குறிப்பாக இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்தில் தனது கணவருடன் இணைந்து அன்னதானம் தண்ணீர்ப்பந்தல் போன்ற பல சிவத் தொண்டுகளைச் செய்து வந்தார்.

1985ம் ஆண்டு மே மாதம் அவரது கணவர் சிவபதம் அடைந்தார். அதனைத் தொடர்ந்து சிலகாலம் மட்டக்களப்பில் வாழ்க்கையைக் கழித்த இவர் 1996இல் லண்டனில் தனது மகளுடன் சிறப்பாக வாழ்ந்து வந்தார் 2003ம் ஆண்டு தைமாதம் பக்கவாத நோயினால் பீடிக்கப்பட்டு தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனழிக்காது போகவே மார்கழி மாதம் 06ம் திகதி 2007ல் சிவபதமடைந்தார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இருபாலை கற்பக
விநாயகரை வேண்டுகிறோம்.

### பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புலம்பல்

கருத்தினில் எம்மை வைத்து
கனிவோடு பாதுகாத்து
விருப்பொடு கேட்டதெல்லாம்
வேகமாய்த் தந்து நின்று
பொறுப்புள தாயாய் எம்மைப்
பேணியே காத்து வந்து
விறுக்கென ஈசன் பாதம்
விரைந்ததன் நோக்கமென்ன?

அன்னையே உந்தன் பாசம்
அதிகநாள் நிலைக்கு மென்று
இன்புடன் வாழ்ந்து வந்தோம்
இடையில் நீ மறைந்ததென்ன
இன்முகம் கொண்டு எம்மை
அரவணைத்திருந்த காலம்
இனியொரு முறையும் வந்து
இன்பத்தில் ஆழ்த்திடாதோ
அன்னையே உந்தன் ஆத்மா
அமைதியாய்ச் சாந்தி கொள்ள
இன்னமும் இறையை நோக்கி
இருகரம் கூப்பு கின்றோம்.

தில்லைநாதன், கணேசம்மா,
கதிரமலைநாதன். சிவநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி செல்லையா தங்கம்

அரியகுட்டி + ம

சதாசிவம்
+
தங்கம்மா

குணலெட்சுமி
குணபூபதி
குணரட்ணம்

முத்தைய
+
செல்லம்ம

பேரம்பலம்
சுந்திரராசா
சிவபாக்கியம்
கமலா

விக்னேஸ்வரன்
+
யோகேஸ்வரி

விஜயகுமாரி

விக்னேஸ்வரி

கலா
+
சிங்கராசா

அனுஜன்
சரணியா
ஜொனதன்
கவிதன்
மதுஷன்


சிவமதி
+
விக்னேஸ்வர

ஜதிகா
ஜகாந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்கம்மா அவர்களின் வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தை அம்மா

எங்கள் அப்பாவை நாங்கள் இழந்தபின் எனது பெரியண்ணாவின் பிள்ளைகள் என்று அத்தைக்கு அத்தையாக அம்மாவுக்கு அம்மாவாக இருந்து இரட்டைப் பொறுப்புக்களை மேற்கொண்டு எம்மை தன் அன்பரவணைப்புடன் பூசித்து அன்பு புரிந்த அத்தையை இனி எப்பிறப்பில் காண்போம்.

நீங்கள் எப்போதும் இருபாலைக் கற்பகனைத் தொழுது வணங்கி வாழ்ந்தீர்கள். உங்கள் பசுமையான நினைவுகள் எங்கள் நெஞ்சில் நிரம்பி வழிகிறது. ஊரெல்லாம் போற்றும் உத்தமி அத்தையாக சீரெல்லாம் சிறக்க வாழ்ந்து காட்டினீர்கள்.

மாமா தொண்டர்படை தலைவனாக இருந்து தொண்டாற்றும் பொழுது நீங்களும் உறுதுணையாக இருந்து எல்லா வகையிலும் தொண்டாற்றினீர்கள்

நல்லூரான் கொடியேறினால் அக்காலத்தில் மின் விளக்கு இல்லாத காலம் மாமா வீடு வீடாக அரிக்கன் லாம்பு எடுத்து நல்லூரானின் அடியார்கள் திருவிழாப் பார்த்துவிட்டுச் செல்ல வீதி வெளிச்சம் கொடுத்துத் தொண்டாற்றினார். நீங்களும் நல்லூரான் கொடியேறினால் இயன்றளவு தொண்டுகள், சேவைகள் செய்து அகமகிழ்வீர்கள். இதனால் காலதூதனை கண்டு கலங்கினான் போல

வெந்தது உடலம் விஞ்சியது சாம்பல் நொந்தது உள்ளம் கோயது வாழ்க்கை

பந்தமும் அறுத்து பாசமும் எரிந்து
இந்த உலகில் இயற்கை இது தான்

கணவனுக்கு நல்ல ஓர் துணைவியாய் பிள்ளைகளுக்கு பிரியமுள்ள தாயாய் அன்பு காட்டுவதில் ஆலயமாய், பண்புடன் பழகுவதில் கோபுரமாய், இனிய வார்த்தைகள் பேசுவதில் இமயமாய், உற்ற ஊறவுகள் மேல் பிரியமாய், நட்புக் கொள்வதில் நல்ல அன்னையாய், சொன்ன சொல் காக்கும் உத்தமியாய், எங்கள் மனதில் நிறைந்த ஜோதியாய் மற்றவர் மனம் நோகா மாமியாய், எல்லோர் மனதிலும் நீங்காத இடம் பிடித்து இன்று அமைதியாய் உறங்கி விட்ட உயர் குண உத்தமியே! உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

என்றும் மறவா

**மருமகன் ச.குணரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான அத்தையை மறப்போமா நாங்கள்

அன்னையைப்போல் அரவணைத்து அன்பு மொழி கூறி அரவணைத்த அத்தை ஆசையுள்ள பொருள் அனைத்தும் வாங்கித்தரும் அத்தை! அழகாகத் தலைவாரி சட்டைபோட்டு எம்மை அலங்கரித்த அத்தை! பசி வந்தவுடன் அத்தையிடம் ஓடுவோம். பாசமழை பொழிந்து பசியாற்றும் அத்தை! எங்கள் அப்பாவின் சகோதரியான அத்தை! எங்களை பவித்திரமாக வாழவைத்து இன்று எம்மை விட்டுப் பிரிந்து போய்விட்டீர்களே! உங்கள் பிரிவைத் தாங்கமுடியாமல் வருந்துகின்றோம் அத்தை! என்றைக்கும் எங்கள் மனதில் நிறைந்திருப்பீர்கள். உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மருமக்கள்

**பேரம்பலம், சிவபாக்கியம், கமலா, பாலு**

## மருமக்கள் புலம்பல்

தமிழீழப் பெருமையை நீர் காத்து வளம் நிறைந்த இருபாலைச் செல்வங்கள் நீர் சேர்த்தீர். பிறந்த குடும்பத்தின் வேர் ஊன்ற மனம் நிறைந்த மக்களாய் சதாசிவம், முத்தையா, தங்கம்மா மூவரும் இருபாலை மக்கள் வாழ்ந்த வளர்ந்து வளர்பிறை போல் பராயம் அடைந்து தாய், தந்தை சொற்படி சுதுமலை யாமாச் சந்தி வைரவர் அருள் பெற்று வாழும் செல்லையா, தங்கம்மா இரு சகோதரர்களையும் மாற்றுச் சம்பந்தமாக வாழ்க்கைத் துணையாக்கி அண்ணர் சதாசிவம் தங்கம்மாவற்கு மூன்று செல்வங்கள் குணலட்சுமி குணபூபதி, குணரத்தினம் ஆகிய மூவரையும் அண்ணர் சதாசிவம் இறந்தபின் பாசமுடன் பெற்ற தாயைப்போல வளர்த்தீர்கள் அத்தை! அத்தை என்று வாய் நிறையக் கூப்பிட்டோம் பார்க்கப் போவோம் அத்தையை இனி எப்படி எங்கே பார்ப்போம் என்று பாசத்தால் துடிக்கின்றோம். என்றும் உங்கள் நினவுகளோடு கலந்திருப்போம்.

துயருறும்

**அரியரத்தினம் குணபூபதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பம்மா

அப்பம்மா எங்கள் ஆருயிரே என்னைத் தாலாட்டிச் சீராட்டி என் அம்மாவைப்போல் வளர்த்தீர்கள். எங்கள் நெஞ்சில் என்றும் நினைவுகள் அழியவில்லை அப்பம்மா!

ஆசையோடு மடி சாய்த்துத் தூங்க வைத்தீர்கள் இப்போது நீங்கள் தூக்கத்திலிருந்து எழும்ப மறுத்து விட்டீர்களே அப்பம்மா

பலாப்பழத்தில் தேனை ஊற்றித் தந்தீர்கள் என அந்த நாட்கள் மீள வருமா? நாங்கள் நலமாக வாழ தினமும் பிள்ளையாரைத் தொழுதீர்களே அப்பம்மா அழுது அழுது கண்ணீரும் வற்றிப்போய் விட்டது. நெஞ்சில் உங்கள் நினைவுகள் என்றென்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.
உங்கள் பிரிவால் வாடும் அன்புப் பேத்திமார்
**கிரிஜா, சுயனி, ராஜி, வாசுகி, கஜனி**

## அம்மம்மாவின் நினைவலைகள்

பாட்டியும் பிரிவும் பேரர் எமையிங்கு
வாட்டி வதைக்குதய்யோ! நீங்கள் எமக்குணவு
ஊட்டி விடுகையிலே உவப்பாக கதைகளோடு
பாட்டுகளும் பலசொல்லிப் பாலரெமை அவரணைத்தீர்
வாட்டிடும் நோய்வந்தெமை சேர்த்திடுங்கால் - அதை
ஓட்டிடுங்கால் பாட்டெடுத்து பாபாவின் பதம் பணிந்தீர்
கேட்டவனும் தன்பிர்வால் பாலகர் நம் நோய் தீர்ப்பான்
சான்றோராய் நாம் வாழ சாற்றி நின்றீர் அறிவுரைகள்
விட்டகலாது அவ்வுரைகள் நம் மனதைவிட்டு என்நாளும்
இட்டமுடன் நீர்சொன்ன பாதைவழி நாம் நடந்து
கட்டாயம் உம் கனவுகளை நனவாகக் நாமுழைப்போம்
கனவுகளின்மேல் ஆணையிட்டு கழலடியை வணங்குகின்றோம்

கலா சிங்கராசா
சுதா பா
ராஜி கீருபா
செல்வி ஹரிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

அம்மா இல்லாக் குறைதனைப் போக்கி
அன்பால் எம்மை ஆளாக்கி வைத்தீர்
இன்பமுடன் மகக்கள் எம்மை வளர்த்து நல்ல
இனியபல பணி செய்த அன்பு அம்மா
உன்னுடைய காலடியின் ஓசை வீட்டில்
ஒலிக்கிறது போலெமக்குத் தெரியுதம்மா
எமையெல்லாம் கதறியழத் தவிக்கவிட்டு
ஏன்பிரிந்து சென்றுவிட்டீர் களம்மா!

**யோகேஸ்வரி, கந்தசாமி,**
**ஜெயா, ஜீவா**

## அப்பம்மாவைத் தேடுகின்றோம்

பிறந்தநாள் தொட்டு என்றும்
பரந்த அன்பு தந்த அப்பம்மாவே
எம்மை தூக்கிச் சீராட்டி குளிப்பாட்டி சோறூட்டி
வளர்த்தீர்களே! சிறந்த பண்புகள் பெற்றிட
சீரான அறிவுரை தந்த அப்பம்மாவே
நிறைந்த வாழ்வு அமைந்திட
நேரான காவல் தந்த தாத்தாவே
மறைந்தும் மறையாது எம்மனதில்
என்றும் வாழ்வீர்கள்

**விக்கினேஸ்வரி**
**பாபு**
**விஜியகுமாரி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அபிராமியம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றா இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பும் அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்ப மில்லாத வாழ்வும்
துய்ய! நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுக்கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சகபாணி
அருள்வாமி அபிராமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி

ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம்ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
- ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய -
அம்மம்மா தேவையெல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா ஈஸ்வரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் -
அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுன் அடைக்கலமே - ஓம் ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து ஞான - நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம்மையெலாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி
இறைவனடி எய்திய எமது குலவிளக்காகிய எம்மை
ஈன்றெடுத்த பாசமிகு தாயார்
திருமதி செல்லையா தங்கம்மா அவர்கள்
காலமான செய்தி கேட்டு உதவிகள்
பல புரிந்த அன்புள்ளங்களுக்கும்,
தொலைபேசி மூலமாக எம் துன்பங்களில் பங்கு
கொண்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின்போதும்
அந்தியேட்டிக் கிரியைகளின்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
பிரிவால் துயருறும்
பிள்ளைகள்
மருமக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

ஹரே கிருஷ்ணா! ஹரே ராமா!

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய் அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

" இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமாகும் "

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



Printed by JR Print London Tel: 020 8503 6643 www.jrprint.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org